## கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை

## இரண்டாம் வருட பொதுக்கலைமாணித் தேர்வு - 2007/2008 (வெளிவாரி)
## (செப்ரம்பர்/ஒக்டோபர் 2010)

LIBRARY
11 FEB
Eastern University, Sri Lanka

## TL 201 தமிழ் மொழியின் இலக்கணம்

நேரம் : 03 மணித்தியாலங்கள்

ஒவ்வொரு பகுதியிலுமிருந்தும் குறைந்தது இரு வினாக்களையேனும், தெரிவுசெய்து எல்லாமாக ஐந்து வினாக்களுக்கு விடை தருக.

### பகுதி – I

01. மொழிக்கு முதலில் வரும் எழுத்துகள் பற்றி நன்னூல் குறிப்பிடுவனவற்றைத் தெளிவுபடுத்தி அவற்றின் தற்காலப் பொருத்தப்பாட்டினை மதிப்பிடுக.

02. தமிழ் எழுத்துக்களின் பிறப்பு குறித்து நன்னூல் கூறுவனவற்றை விளக்குக.

03. (அ) தமிழ் இலக்கண மரபில் திசைச் சொற்கள் என வரையறுக்கப்படுவனவற்றை நன்னூலைத் துணைக் கொண்டு சுருக்கமாகக் கூறுக.

(ஆ) தமிழில் பிறமொழிக் கலப்பு குறித்துக் கருத்துரைக்குக.

04. (அ) புணர்ச்சியாவது யாது?

(ஆ) மகர ஈறு, மை ஈறு ஆகியவற்றின் புணர்ச்சி குறித்து நன்னூல் கூறுவனவற்றை மதிப்பிடுக.

### பகுதி – II

05. பெயர்ச்சொற்களை நன்னூலார் எவ்வெவ் அடிப்படைகளில் பாகுபாடு செய்கிறார்? விளக்குக.

06. (அ) வேற்றுமை என்றால் என்ன?

(ஆ) "தமிழிலக்கணகாரர் கூறும் வேற்றுமைப்பாகுபாடு, பல குறைபாடுகளைக் கொண்டுள்ளது." என்பார் கூற்றின் பொருத்தப்பாட்டினை ஆராய்க.

07. வினைகாலங் காட்டுவது பற்றி நன்னூலார் கூறியவற்றைத் தந்து தற்கால வழக்கில் அதன் பொருத்தப்பாட்டினை ஆராய்க?

08. பின்வருவனவற்றுள் எவையேனும் இரண்டிற்குக் குறிப்புரை எழுதுக.

(அ) ஆகு பெயரும் அன்மொழித் தொகையும்
(ஆ) துணைவினைகள்
(இ) இடைச்சொற்பாகுபாடு
(ஈ) உரிச்சொற்கள்

(5×20=100புள்ளிகள்)